# பாபாசாகேப்
# டாக்டர் அம்பேத்கர்
## நூல் தொகுப்பு :
### தொகுதி 2



Created with
nitroPDF professional
download the free trial online at nitropdf.com/professional

டாக்டர் பாபாசாகேப்

# அம்பேத்கர்

நூல் தொகுப்பு

தொகுதி 2

Created with

nitroPDF professional

download the free trial online at nitropdf.com/professional



டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர்.

எம். ஏ, பிஎச். டி., டி. எஸ்ஸி., பார்-அட்-லா., எல். எல். டி., டி. லிட்.,

*1891 — 1956*

Created with nitroPDF professional
download the free trial online at nitropdf.com/professional

''இந்தியரின் வாழ்க்கை நெறியைப் போற்றியுரைக்க முன்வைக்கும் பல காரணங்களில் ஒன்று, அந்த நெறியைப் பின்பற்றி வந்திருப்பதால்தான் இன்றளவும் உலகில் எஞ்சியுள்ள பழைமைச் சிறப்புள்ள நாடாக இந்தியா நிலைத்து இருந்து வருகிறது என்ற கருத்தாகும். இந்தக் கூற்றினை அடிக்கடி கேட்டு வருகிறோம்; அவ்வளவு சுலபமாக ஒதுக்கிவிட முடியாத அளவு உயர்ந்த கருத்துக்களைக் கூறும் பெரிய அறிவாளிகள்கூட இவ்வாறு கூறியிருக்கிறார்கள். இக்கூற்றுக்குச் சான்றுகள் உள்ளனவா, இல்லையா என்பதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. அந்தத் தொடர்நிலை உண்மை என்றே கொள்வோம். இந்த நிலை குறித்து அதைக் காட்டிலும் முக்கியமாக ஒன்றைக் குறிப்பிடுவது அவசியமாகிறது. அது இதுதான்: தொன்றுதொட்டுத் தொடர்ந்து நிலைத்திருந்து வந்திருப்பவற்றில் பல பாங்குகள் உண்டு; அவை யாவுமே ஒரே விதமாகப் பாராட்டுதலைப் பெறத்தக்கவை அல்ல. எடுத்துக்காட்டாக, பணிந்திருந்து, தகுந்த தருணத்தில் பின்வாங்கி வளைந்து கொடுப்பதன் காரணமாகப் பலவீனமான மக்கள் தொடர்ந்து வாழ்ந்து வருவார்கள். இவ்வாறு மானங்கெட்டு அஞ்சி வாழ்வதோ, அடிமையாய் அடிபணிந்து, காலங்காலமாய்த் தொடர்ந்து வாழ்ந்து வருவதோ பாராட்டத்தக்கதுதானா? இந்த இழிந்த வாழ்வும், வீரிட்டெழுந்து பெருமையை நிலைநாட்டி வழிவழியாய் வாழ்வைத் தொடருவதும் சமமாகிவிடுமா? ஆகவே ஒரு மக்கள் கூட்டத்தினர் காலத்தைப் புறங்கண்டு எஞ்சி வாழ்ந்து வருகிறார்கள் என்பதனாலேயே அவர்கள் காலங்காலமாய் வளர்ச்சியுற்று முன்னேறி வந்துள்ளார்கள் என்பதை ஒப்புக் கொள்ள முடியாது. எனவே, தொடர்வாழ்வு முக்கியமல்ல; பண்புத் தரமும் வாழ்க்கைத் தளமும்தான் முக்கியமானவை.''

டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர்

'திரு. ரஸ்ஸலும் சமுதாய மறுசீரமைப்பும்'

Created with nitroPDF professional
download the free trial online at nitropdf.com/professional